# வழிகாட்டற் கைநூல்



Implemented by

DANISH REFUGEE COUNCIL

Funded by

# முன்னுரை

ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க சமூக அங்கத்தவர் களாகிய நாம் ஒவ்வொருவரும் பொறுப்புள்ளவர்களாக மாறவேண்டும். அன்பு, கருணை, விசுவாசம், பிறரை மதிக்கும் தன்மை இன்னும் பல நல்ல பண்புகளை கொண்டுள்ள நாம் அவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டியது இப்போது மிக அவசியமாகும். எமது சமூகத்தில் பல குடும்பங்களில், தொழில் ஸ்தானங்களில், பொது இடங்களில்,அன்றாடம் நமது தேவைகளையும் சேவைகளையும் பூர்த்தி செய்கின்ற இடங்களில் அன்பு பலவீனமடைந்து மாறாக வன்முறை பலம் பெற்றுள்ளது. இதனால் உறவு நிலைப் பாதிப்பு ஏற்படுகிறது. முக்கியமாக குடும்பம் என்கின்ற அமைப்பும் பிரச்சினைகள் காரணமாகச் சிதைவடைகிறது. இங்கே நேரடியாகவும் மறைமுகமாகவும் குடும்ப உறுப்பினர்கள் பாதிக்கப்படுகின்றனர். வெளிப்பாதிப்புக்களின் தலையீடு குடும்பங்களை சின்னாபின்னப்படுத்துவதற்கு இதுவே பிரதான காரணியாகும். இதுபோல தொழில் ஸ்தானங்களிலும் தொழில் முரண்பாடு உருவாகிறது. சேவைகள் தேவைகளை பூர்த்தி செய்யமுடியாமல் போகிறது. சாதாரணமாக எமது சமூகத்தில் இந்தப் பிரச்சினைகளின் சிக்கற் தன்மையை அனைவராலும் விளங்கிக் கொள்ளமுடியும். பல உண்மைச் சம்பவங்கள் இதற்கு சான்றாகும். ஆனால் தீர்வை நோக்கி நகர்வதற்கு பல தாமதங்கள் காணப்படுகிறது. சமூக அந்தஸ்து கலாச்சாரம் போன்ற காரணங்களைக்காட்டி சமூகத்தினர் அடக்கப் படுகின்றனர். பாதிக்கப்பட்டவர்கள் அல்லது பாதிக்கப்படப்போகிறவர்களுக்கு ஆதரவு கொடுத்து வழிப்படுத்த வேண்டும். சிக்கற் தன்மையைக் கருத்திற் கொண்டு யாழ் மாவட்டத்தில் அரச மற்றும் தனியார் அமைப்புக்கள் பல உதவிகளை வழங்கி வருகின்றன. இருந்த போதிலும் சமூகத்தவருக்கு விழிப்புணர்வு போதாமலேயுள்ளது. பிரச்சினை ஒன்று ஏற்படும்போது எங்கே செல்வது யாரை அணுகுவது போன்ற விடயங்கள் தெரியாமையாலும் பயம் வெட்கம் மற்றும் கலாசார கட்டுப்பாடுகள் காரணமாகவும் பல தண்டிக்கப்படவேண்டிய குடும்ப மற்றும் பாலியல் சார் வன்முறைகள் வெளியே தெரியவராமலேயே மறைக்கப்படுகின்றன. இங்கு பாதிக்கப்பட்டவர் மேலும் மேலும் மன உளைச்சலுக்கு ஆளாகிக்

கொள்வாரேயன்றி அவருடைய பிரச்சினைக்கு நிலையான தீர்வு கிடைக்காமல் போகிறது. மனிதர்கள் ஒவ்வொருவரும் சுதந்திரமாக தமது செயற்பாடுகளைச் செய்வதற்கான உரிமையுடையவர்கள். காரணமின்றி ஒருவருடைய சுதந்திரத்தில் தலையிடுவது, அவருடைய வாழும் உரிமையை பறிக்குமுகமாக நடந்து கொள்வது, ஒருவருடைய மதிப்பிற்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் நடந்து கொள்வது போன்ற செயற்பாடுகள் குற்றமென நிருபிக்கப்படும்போது பாதிப்பை ஏற்படுத்திய நபருக்கு கடுமையான தண்டனைகளை சட்டம் பெற்றுக் கொடுக்கும். சட்டம் தன் கடமையை சரிவரச் செய்யும். இக்காரணங்களை அடிப்படையாகக் கொண்டு டெனிஸ் அகதிகள் பேரவை வழிகாட்டற் கைநூல் ஒன்றினை வெளியிடத் தீர்மானித்துள்ளது. இந்நூலிற் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து சம்பவங்களும் எமது கள அனுபவமூடாகப் பெறப்பட்டவை. இவ்வழிகாட்டல் நூல் வாசிக்கும் உங்கள் அனைவருக்கும் பயனுடையதாகும் என்பது எமது நம்பிக்கை.

**01.** எனது தம்பி எனது கலியாணச் செலவுகளை பொறுப்பேற்பதற்காய் வெளிநாடு ஒன்றிற்கு உழைக்கச் செல்வதற்காக முகவர் ஒருவரிடம் பணத்தை வழங்கி ஏமாற்றப்பட்டுவிட்டான். அவனுடைய பிரச்சினைக்கு எங்கு சென்று தீர்வைப் பெறலாம்?

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
1ம் குறுக்குத்தெரு
நல்லூர். யாழ்ப்பாணம்.

வெளிநாடு செல்பவர்க்காய் தொழிற்பயிற்சி வழங்கி வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கவல்ல ஏதேனும் அமைப்பு யாழ்ப்பாணத்தில் உண்டா?

ஆம். வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் பயிற்சிகள் வழங்கப்பட்டு வேலைவாய்ப்புப் பெற்றுக்கொடுக்கப்படுகிறது.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம்

1ம் குறுக்குத்தெரு,

நல்லூர், யாழ்ப்பாணம்.

இவர்களால் வேறு எவ்வகையான உதவிகள் வழங்கப்படுகின்றன?

1 இலங்கையின் புலம்பெயர்ந்த தொழிலாளர்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் பாதுகாப்பிற்கான திட்டங் களை செயற்படுத்தல், நலன் பேணல், ஊக்குவித்தல் (பின்வரும் சில நன்மைகள் உள்ளடங்கலாக)

காப்புறுதித்திட்டங்கள்

வீடமைப்புக்கடன்கள்

சுயதொழிலுக்கான கடன்கள்

உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான புலமைப்பரிசில்கள்

2 வெளிநாடுகளில் தொழில்புரிவோர் மற்றும் புலம் பெயர்ந்தோர் பற்றிய விரிவான தரவுகளை பேணல்.

3 தரமான ஒப்பந்தங்களை விருத்தி செய்தல் மற்றும் புலம்பெயர்ந்து செல்பவர்களுக்கு பயணத்திற்கு முன் பயிற்சி வழங்கல்

4 பாதுகாப்பாக இலங்கை திரும்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்

5 தொழில் முகவர்களுக்கு (ஏஜென்சி) உரிய தராதரத்தினை வகுத்து அனுமதிப்பத்திரம் வழங்கலும் அவர்கள் தொடர்பான தரவுகளை பேணுதலும்.

**02.** சிவாஜினி 14 வயது பெண் 20 வயது மாணவன் ஒருவனால் பலாத்காரமாக பாலியல் உறவுக்கு உட்படுத்தப்பட்டுவிட்டாள். ஆனால் தற்போது அந்த மாணவன் அவளை விட்டு வேறிடம் சென்றுவிட்டான். அவளுக்கு உடனடி மருத்துவ சேவைபெற எங்கு செல்வாள்? சட்ட ஆலோசனை எதனையும் பெறமுடியுமா?

ஆம் நிச்சயமாக அவளுடைய பிரச்சினைக்குத் தீர்வுள்ளது. ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் சிறுவர் உரிமைகளை மேம்படுத்தும் அதிகாரி உள்ளார். அவருடாக மேற்கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம். அல்லாவிட்டால் உடனடியாக யாழ்போதனா வைத்தியசாலைக்குச் சென்றால் மருத்துவ மற்றும் சட்ட உதவிகளுக்கான ஒழுங்குகளை அவர்கள் மேற்கொள்வர்.

அவளை பாதுகாக்கவல்ல குழு எது?

யாழ்ப்போதனா வைத்திய சாலையில் பால்பால்நிலை சார் வன்முறைகளுக்கெதிரான செயற்குழு அறை எண் 32ல் இயங்கி வருகிறது. அங்கு சென்றால் சட்டரீதியான அணுகுமுறை ஆலோசனை மற்றும் உள மருத்துவ சிகிற்சையைப் பெறமுடியும்.

தொ.பே.இல: 021 222 1090

**01.** எனது தம்பி எனது கலியாணச் செலவுகளை பொறுப்பேற்பதற்காய் வெளிநாடு ஒன்றிற்கு உழைக்கச் செல்வதற்காக முகவர் ஒருவரிடம் பணத்தை வழங்கி ஏமாற்றப்பட்டுவிட்டான். அவனுடைய பிரச்சினைக்கு எங்கு சென்று தீர்வைப் பெறலாம்?

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
1ம் குறுக்குத்தெரு
நல்லூர். யாழ்ப்பாணம்.

வெளிநாடு செல்பவர்க்காய் தொழிற்பயிற்சி வழங்கி வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கவல்ல ஏதேனும் அமைப்பு யாழ்ப்பாணத்தில் உண்டா?

ஆம். வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் பயிற்சிகள் வழங்கப்பட்டு வேலைவாய்ப்புப் பெற்றுக்கொடுக்கப்படுகிறது.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம்

1ம் குறுக்குத்தெரு,

நல்லூர், யாழ்ப்பாணம்.

இவர்களால் வேறு எவ்வகையான உதவிகள் வழங்கப்படுகின்றன?

1 இலங்கையின் புலம்பெயர்ந்த தொழிலாளர்களினதும் அவர்களின் குடும்பங்களினதும் பாதுகாப்பிற்கான திட்டங் களை செயற்படுத்தல், நலன் பேணல், ஊக்குவித்தல் (பின்வரும் சில நன்மைகள் உள்ளடங்கலாக)

காப்புறுதித்திட்டங்கள்

வீடமைப்புக்கடன்கள்

சுயதொழிலுக்கான கடன்கள்

உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான புலமைப்பரிசில்கள்

2 வெளிநாடுகளில் தொழில்புரிவோர் மற்றும் புலம் பெயர்ந்தோர் பற்றிய விரிவான தரவுகளை பேணல்.

3 தரமான ஒப்பந்தங்களை விருத்தி செய்தல் மற்றும் புலம்பெயர்ந்து செல்பவர்களுக்கு பயணத்திற்கு முன் பயிற்சி வழங்கல்

4 பாதுகாப்பாக இலங்கை திரும்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்

5 தொழில் முகவர்களுக்கு (ஏஜென்சி) உரிய தராதரத்தினை வகுத்து அனுமதிப்பத்திரம் வழங்கலும் அவர்கள் தொடர்பான தரவுகளை பேணுதலும்.

**02.** சிவாஜினி 14 வயது பெண் 20 வயது மாணவன் ஒருவனால் பலாத்காரமாக பாலியல் உறவுக்கு உட்படுத்தப்பட்டுவிட்டாள். ஆனால் தற்போது அந்த மாணவன் அவளை விட்டு வேறிடம் சென்றுவிட்டான். அவளுக்கு உடனடி மருத்துவ சேவைபெற எங்கு செல்வாள்? சட்ட ஆலோசனை எதனையும் பெறமுடியுமா?

ஆம் நிச்சயமாக அவளுடைய பிரச்சினைக்குத் தீர்வுள்ளது. ஓவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் சிறுவர் உரிமைகளை மேம்படுத்தும் அதிகாரி உள்ளார். அவரூடாக மேற்கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம். அல்லாவிட்டால் உடனடியாக யாழ்போதனா வைத்தியசாலைக்குச் சென்றால் மருத்துவ மற்றும் சட்ட உதவிகளுக்கான ஒழுங்குகளை அவர்கள் மேற்கொள்வர்.

அவளை பாதுகாக்கவல்ல குழு எது?

யாழ்ப்போதனா வைத்திய சாலையில் பால்பால்நிலை சார் வன்முறைகளுக்கெதிரான செயற்குழு அறை எண் 32ல் இயங்கி வருகிறது. அங்கு சென்றால் சட்டரீதியான அணுகுமுறை ஆலோசனை மற்றும் உள மருத்துவ சிகிற்சையைப் பெறமுடியும்.

தொ.பே.இல: 021 222 1090

இவர்களுடைய மேலதிக சேவைகள்:

1 பாதிக்கப்பட்டவருக்கு உடனடியாக மருத்துவ வேவைக்குட்படுத்துவதற்கான வழிகாட்டலை வழங்குதல்

2 உதவி வழங்கும் நிறுவனங்களுக்குப் பாதிக்கப் பட்டவரை அனுப்புவதனூடாக உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

3 உளமருத்துவ சிகிற்சையளித்தல்

4 பாதிப்பை ஏற்படுத்திய நபருடன் தொடர்பினை ஏற்படுத்தி பிரச்சினைகளை இலகுபடுத்தல்.

5 பாதிக்கப்பட்டவருக்கு தற்காலிக பாதுகாப்பை உறுதி செய்வதற்கான தங்குமிட உதவிகளை நிறுவனத்திட மிருந்து பெற்றுக்கொடுத்தல்.

03. நாங்கள் அன்றாட உழைப்பின் மூலம் எமது குடும்பத்தை நடாத்தி வருகிறோம். எமது மகளை ஓர் அரசாங்கப் பாடசாலையில் சேர்ப்பதற்கு முயற்சித்த போது, அப்பாடசாலை அபிவிருத்தி நிதிக்கென கணிசமான தொகை எம்மிடம் கோரப்பட்டது. அத்தொகையினை வழங்க முடியாத காரணத்தினால் எமது மகளை பாடசாலையில் இணைக்க முடியவில்லை. சுமபந்தப்பட்ட அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டபோதும் அவர்கள் எவ் நடவடிக்கையினையும் எடுக்கவில்லை. இது தொடர்பில் வேறு எவரினை நாட முடியும்?

மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சென்று முறையிடலாம்.

மனித உரிமைகள் ஆணைக்குழு

இல.1, 3ம் குறுக்கு வீதி (OLR தேவாலயம் அருகாமை)

யாழ்ப்பாணம்.

தொ.பே.இல: 021 222 2021

மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் மேலதிக சேவைகளுக்கு?

1 அடிப்படை உரிமைமீறல்கள் குறித்துப் புலனாய்வு செய்தலும் விசாரணை மேற்கொள்ளலும்

2 நீதி மன்றத்தின் அனுமதியுடன் நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளில் தலையீடு செய்தல்

3 தடுப்பு நிலையங்களிற்கு கிரமமாக செல்வதன் மூலம் தடுப்புக்காவலில் உள்ளவர்களின் நிலையைக் கண்காணித்தல்.

4 மனித உரிமை விடையங்களைப் பற்றி ஆய்வு செய்தலும் மனித உரிமைகள் பற்றி பொது மக்களிற்கு அறிவூட்டும் கல்வி நிகழ்ச்சிதிட்டங்களை மேற்கொள்ளல்.

04. கடந்த கால இடப்பெயர்வின் போது எனது காணி உறுதியைத் தொலைத்துவிட்டேன். தேடுதல் விண்ணப்பப் படிவத்தை எங்கே சென்று பெற்றுக் கொள்வது?

மாவட்ட காணிப்பதிவாளர் திணைக்களம்

மாவட்டச் செயலகம்

யாழ்ப்பாணம்

வேறு இடங்களில் காணிப்பதிவாளர் காரியாலயம் உண்டா?

ஆம்

தற்போது பருத்தித்துறையிலும் யாழ்ப்பாணத்திலும் உதவிக் காணிப்பதிவாளர் காரியாலயங்கள் இயங்கி வருகின்றன.

காணிப்பதிவாளர் திணைக்களத்தால் வேறு எவ்வகையான உதவிகளைப் பெறலாம்?

1 காணி உறுதிகளைப் பதிவு செய்தல்

2 நொத்தாரிசினால் சமர்ப்பிக்கப்படும் உறுதிகளை ஆவணப்படுத்தல்.

3 இந்த உறுதிகளைப் பரிசீலனை செய்து உறுதிப்படுத்தல்

4 காணி தொடர்பிலான வரலாற்றுப்பதிவுகளை மேற்கொள்ளலும் (சுருக்கப்பிரதி) அப்பதிவுகளின் அத்தாட்சிப்படுத்திய பிரதிகளை வழங்குதலும்

05. எமது ஊர் மீளக்குடியமர்விற்காய் அனுமதிக்கப்பட்டு மக்கள் அண்மையில் குடியேறியுள்ளனர். அபிவிருத்தி வேலைகள் நடைபெற்றவண்ணமுள்ளன. ஆனாலும் எமக்கு முன்னைய போக்குவரத்து வசதிகள் இன்னமும் ஏற்படுத்தப்படவில்லை. போக்குவரத்துவசதிகளின்மையால் நாம் மிகவும் கஸ்டப்படுகிறோம். அதிக தூரம் நடந்து தரிப்பிடத்தை அடையவேண்டியுள்ளது. எமது பிரச்சினைக்கு தீர்வு உள்ளதா?

ஆம் நீங்கள் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ் காரியாலயத்துடன் தொடர்பினை மேற்கொண்டு சேவையினைத் தொடர விண்ணப்பிக்கலாம். குறிப்பிட்ட ஒரு இடத்துக்கு போக்குவரத்து சேவையை வழங்குவதற்கென வரையறைகள் இருக்கின்றன அதனடிப்படையில் சேவைகள் வழங்கப்படு கின்றன.

முகாமையாளர்
இலங்கைப் போக்குவரத்துச் சபை
கோண்டாவில்.

அல்லது

இலங்கைப் போக்குவரத்து சபை
200 கிருல வீதி,
நாரகன்பிட்டி,
கொழும்பு.

இவர்களால் வழங்கப்படும் வேறு சேவைகள் எவை?

1 இலங்கை முழுவதும் திருப்திகரமான போக்குவரத்துச் சேவையை வழங்குதல்
2 பாடசாலைச் சிறுவர்களுக்கான போக்குவரத்துச் சேவையினை வழங்குதல்
3 சிக்கனமற்ற மார்க்கங்களில் வசு வண்டிகளை ஏற்பாடு செய்தல்
4 பண்டிகை, விசேட வைபவங்கள், பாராளுமன்ற மாகாணத் தேர்தல் காலங்களில் போது விசேட போக்குவரத்துச் சேவையினை வழங்குதல்
5 அஞ்சல் பொதிகளை செய்தித் தாள்களை ஏற்றிச் செல்லுதல்

06. எனது கணவர் வேறு பெண்ணுடன் தொடர்பு வைத்துள்ளார் என்று அறிந்து ஒரு கிழமையில் அவர் என்னையும் எனது 3 குழந்தைகளையும் விட்டு அந்தப் பெண்ணுடன் வவுனியா சென்றுவிட்டார். எனக்கு வேறு உதவிகள் எதுவும் இல்லை. எனக்கு எனது கணவர் மீண்டும் வேண்டும் இல்லையேல் அவர் என்னுடன் வாழ மறுப்பின் விவாகரத்து வேண்டும். நான் யாரை நாட வேண்டும்?

உங்கள் பிரதேச பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளலாம்.

மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம் (அனைத்து பிரதேச செயலகங்கள்)

மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தரினால் வழங்கப்படும் மேலதிக சேவைகள் எவை?

1 பால்நிலை சார் வன்முறையால் பாதிக்கப்பட்டவருக்கு சட்ட மற்றும் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
2 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு சுயதொழில் கடன் வழங்கல்
3 கிராமமட்ட பெண்கள் குழுவிற்கான கடன் வழங்கல் திட்டம்.

4 இனப்பெருக்க சுகாதாரம் குழந்தைகள் பெண்களுக் கெதிரான வன்முறை தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை கிராமமட்ட அமைப்புகளுக்கு வழங்குதல்.

அல்லது

சட்ட உதவிகள் ஆணைக்குழுவின் உதவியுடன் சட்ட நடவடிக்கையினை மேற்கொள்ளலாம்.

சட்ட உதவிகள் ஆணைக்குழு
யாழ்ப்பாணம் நீதிமன்ற கட்டடம்
யாழ்ப்பாணம்.

**சட்ட உதவிகள் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் இதர வேவைகள் எவை?**

1 சிவில் ஆவணங்களைப் பெறுவதற்கு உதவிசெய்தல்.
2 நுகர்வோருக்கான சட்ட உதவிகள் வழங்குதல்
2 மாற்றுவலுவுடையோருக்கான சட்ட உதவிகள் வழங்குதல்
3 முதியோர் இடம்பெயர்ந்தோருக்கான சட்ட உதவிகள் வழங்குதல்
4 குடியகல்வோருக்கான சட்ட உதவிகள் வழங்குதல்
5 மனித உரிமை மீறல்களை முறைப்பாடு செய்தல்.
6 விழிப்புணர்வுக்கருத்தரங்குகளுக்கான வேண்டுகோள் களைப் பெற்றுக் கொள்ளுதல்.

அல்லது

தேவை நாடும் மகளிர் அமைப்புக்கு சென்று தேவையான தீர்வினைப் பெறமுடியும்

தேவை நாடும் மகளிர் அமைப்பு
சோமசுந்தரம் அவனியு
யாழ்ப்பாணம்

**தேவைநாடும் மகளிர் அமைப்பினால் வழங்கப்படும் இதர வேவைகள் எவை?**

1 யாழ் மாவட்டத்தில் வன்முறைப்பாதிப்பிற்குள்ளாகும் பெண்ணிற்கு சட்டம் சம்பந்தமான சகல உதவிகளையும் வழங்குதல்

அல்லது

மனித உரிமைகள் இல்லத்திற்குச் சென்று முறையிடுவதன் மூலம் சட்ட தீர்வைப் பெறலாம்.

மனித உரிமைகள் இல்லம்
செட்டியார் வீதி
யாழ்ப்பாணம்.

மனித உரிமைகள் இல்லத்தினால் வழங்கப்படும் இதர சேவைகள் எவை?

2 இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு கிடைக்கவேண்டிய சேவைகள் சரியாக கிடைக்கின்றதா என்பதனை உறுதிசெய்தல்
3 சொத்துக்கள் தொடர்பான உரிமைகளை இடம்பெயர்ந்த மக்கள் மீளப் பெறுவதற்கு உதவுதல்.
4 விவாகரத்து, தாபரிப்பு வழக்குகளுக்கு உதவுவதோடு சட்டசம்பந்தமான அனைத்து உதவிகளையும் பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு வழங்குதல்.
5 முறைப்பாடு செய்வதற்கான அலுவலகத்தை நடைமுறைப்படுத்தி அடிப்படை மனித உரிமை மீறல்களை பதிவு செய்தல்.
6 பாதிக்கப்பட்ட பெண்களுக்கான வாழ்வாதார உதவியளித்தல்
7 பாதிக்கப்பட்டவர்களுடைய உடல் ரீதியான உள ரீதியான உதவிகள் நிறைவு பெறுவதை உறுதி செய்தல்
8 பாதிக்கப்பட்டவர் அதிலிருந்து மீள்வதனை கண்காணிப்பதனூடாக உதவி செய்தல்

07. எனக்கும் எனது அயல்வீட்டுக்காரருக்குமிடையில் வேலி அடைப்பதில் பிரச்சினை. தனது ஒழுங்கையினுள் எனது வேலிக்கதியாலை நட்டுவிட்டதாகக் கூறி தினமும் சண்டைக்கு வருகிறார். என்னிடமோ பணவசதியில்லை. இருவரும் ஒருமித்து சமாதானமாகப் பேசி தீர்வுகாண விரும்புகிறேன். யாரை நாடினால் உதவியைப் பெறலாம்?

இப்பிரச்சினைக்கு நீங்கள் மத்தியஸ்த சபையை நாடலாம். ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் மத்தியஸ்த சபைகள் அமைந்துள்ளது. அங்கே மத்தியஸ்த சபை இணைப்பாளருடன் தொடர்பு கொள்ளலாம்.

மத்தியஸ்த சபையின் ஏனைய செயற்பாடுகள்?

1. சிவில் பிணக்குகளைக் கையாளுதல்
    1. கடன் பிரச்சினைகள்
    2. நட்ட ஈட்டுத்தொகையை அறவிடுதல்
    3. அசையாத மற்றும் அசையும் சொத்துக்கள் மீதான பிரச்சினைகளைத் தீர்த்தல்

2. சிறுகுற்றச் செயல்கள் தொடர்பான தொல்லைகள்
    1. ஒருவருக்கு உடலியல்ரீதியாக தீங்கு விளைவிக்கும் தாக்குதல் இடையூறுகளை விசாரித்தல்.
    2. சட்டத்திற்கு நியாயமற்றமுறையில் ஏற்படுத்தப்படும் இடையூறுகளை விசாரித்தல்
    3. சட்டவிரோதமான பலவந்தப்படுத்தல்களை விசாரித்தல்
    4. ஒரு நபரை அபகீர்த்தியடையச் செய்யும் விடயங்களை விசாரணை செய்தல்.

08. எமது ஊரில் உள்ள ஒரு கடையில் பொருட்களின் விலை மற்றைய கடைகளுடன் ஒப்பிடம் போது அதிகமாக உள்ளது. அங்கர் காலவதியாக காணப்பட்டது. விலைப்பட்டியல் வைக்கப்படவில்லை. யாரிடம் சென்றால் தீர்வு கிடைக்கும்?

நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை

விசாரணை அதிகாரி

மாவட்ட செயலகம்

கச்சேரி

நுகர்வோர் பாதுகாப்புச் சபையின் ஏனைய சேவைகள் எவை?

1 பாவனையாளர் எதிர்நோக்குகின்ற பல்வேறு முறைகேடுகளிலிருந்து அவர்களுக்கு உதவுவதற்காக புலனாய்வுகளை மேற்கொள்ளல்

2 அதிகாரசபையினால் விதிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் கட்டளைகளுக்கு அமைந்தொழுகாவண்ணம் பண்டங்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்தல் வழங்குதல் களஞ்சியப்படுத்தல் கொண்டுசெல்லல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய விடயங்கள் சம்பந்தமாகப் புலனாய்வு செய்தல்.

3 வியாபாரிகளின் தவறுகள் சம்பந்தமான முறைப்பாடு களை புலனாய்வு செய்தல், சந்தை சுற்றிவளைப்புக் களை மேற்கொள்ளல், தவறு இழைத்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல்

4 பாவனையாளர் அமைப்புக்களை உருவாக்குதல் அதனூடாக பாவனையாளரின் பிரச்சினைகளை முன்வைத்தல்.

5 போட்டி எதிர்ப்பு நடத்தைப் போக்குகள் தொடர்பாக செய்யப்படுகின்ற முறைப்பாடுகளை புலனாய்வு செய்தல்.

6 பல்வேறு பண்டங்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக நிலவுகின்ற சந்தை நிலவரங்கள் பற்றிய தகவல்களை வழங்குவதற்கான ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கையிடல்.

09. எனது கிராமத்தின் ஒருசில பகுதிகளில் உள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள் தமது பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்தாமல் அவர்களை தோட்ட வேலை, கூலிவேலை, கடை வேலைகளுக்கு அனுப்புவதை காணக் கூடியதாகவுள்ளது. மேலும் வீடுகளில் இளைய சகோதரர்களை பராமரிப்பதும் அவர்கள் வேலையாகவுள்ளது. பலமுறை கூறியும் பெற்றோர் கவனமெடுப்பதாக தெரியவில்லை. இச்சிறுவர்களின் வளமான எதிர்காலத்திற்கு வழியுண்டா?

ஆம் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் சிறுவர் உரிமைகளை மேம்படுத்தும் அதிகாரி உள்ளார். அவருடன் தொடர்பு கொண்டு தகவலை வழங்கினால் அவர்கள் மேற்கொண்டு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பர்.

சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தரினால் வழங்கப்படும் ஏனைய உதவிகள் எவை?

1 பாடசாலை இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலையில் மீளிணைத்தல்
2 பாதிக்கப்பட்ட பிள்ளைகளினது பெற்றோருக்கு சுயதொழில் உதவி வழங்கல்.
3 பாதிக்கப்பட்ட பிள்ளைகளினது பெற்றோருக்கு சுயதொழில் செய்வதற்கான பயிற்சி வழங்கல்.
4 ஆதரவற்ற சிறுவருக்கு உதவி அளித்தல்
5 மாற்று வலுவுடைய சிறுவருக்கு உதவியளித்தல்
6 நோயால் பாதிக்கப்பட்ட சிறுவருக்கு உதவியளித்தல்
7 புனர்வாழ்வு நிலையத்தால் விடுவிக்கப்பட்ட சிறுவருக்கு உதவியளித்தல்
8 சிறுவர் இல்லங்களில் சிறுவர்களை தேவைகருதி இணைப்பதற்கான சிபாரிசு அனுமதி வழங்கல்
9 சிறுவர் இல்லங்களிலுள்ள பெற்றோரையுடைய சிறுவர்களை மீளவும் பெற்றோருடன் மீளிணைத்தல்
10 சிறுவர் கழகங்கள் அமைத்தல், பதிவு செய்தல், செயற்படுத்தல், உதவியளித்தல்.
11 சிறுவர்களுக்கெதிரான வன்முறைகளுக்கு எதிரான சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ளல்

10. எனது கணவர் தினமும் குடித்துவிட்டு வந்து எம்மைக் கொடுமைப்படுத்துகிறார். நானும் மகளும் தினமும் இரவில் கஸ்டப்படுகிறோம். எனது கணவரை இக்குடிபோதைப் பழக்கத்திலிருந்து மீட்டு மனிதனாக்க வேண்டும். எனக்கு எங்கே உதவி கிடைக்கும்?

நீங்கள் உங்கள் பிரதேச செயலகத்தில் பணிபுரிகின்ற உளவளத்துணையாளரை சந்தித்து வேண்டிய உதவியைப் பெறலாம்.

உளவளத்துணையாளரால் வழங்கப்படுகின்ற இதர சேவைகள்?

1 உளவளத்துணை சார்ந்த பயிற்சிகளை வழங்குதல்
2 உளவளத்துணை உதவி தேவையானவர்களை கண்டறிந்து பிரச்சினைகளை அறிவதனூடாக தொடர்புடையவர்களுக்கு சிபாரிசு செய்தல்.
3 வீட்டுத்தரிசிப்புக்களை மேற்கொண்டு கண்காணித்தல்.

அல்லது

நேரடியாக தெல்லிப்பளை அரச வைத்திய சாலைக்குச் சென்றால் இவர்களுக்கு மதுவிலிருந்து நிரந்தர விடுதலைக்கான சிகிற்சையுண்டு.

அல்லது

சாந்திகம் உளவளத்துணை நிலையத்தை அணுகி திருப்தியான சேவையைப் பெறலாம்.

சாந்திகம்
கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்

சாந்திகம் நிறுவனத்தால் வழங்கப்படுகின்ற இதர சேவைகள்?

1 உளவளத்துணைப்பயிற்சிகள் வழங்குதல்
2 கிராமியத் தொண்டர்களுக்கு பயிற்சி அளித்து கிராமத்தவருக்கு உதவுதல்
3 இலவச மருத்துவ சிகிற்சை முகாம்களை நடாத்துதல்
4 பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழ்வாதார உதவியளித்தல்
5 விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடாத்துதல்

11. எனக்கு வயது 67 ஆகிறது. எனது பிள்ளைகள் என்னை அனாதரவாய் விட்டுவிட்டார்கள். சாப்பிடக்கூட வழியில்லாமல் தினமும் அல்லற்படுகிறேன். அரச முதியோர் இல்லங்கள் ஏதாவதொன்றில் சேர விரும்புகிறேன். பிச்சைச் சம்பளம் கூட எனக்குக் கிடைப்பதில்லை. நான் எங்கே சென்று கதைக்கலாம்? உங்களுக்கு உதவ பிரதேச செயலகத்தில் சமூக சேவைகள் உத்தியோகத்தர் உள்ளார். அவருடன் தொடர்பு கொண்டு தீர்வைப் பெறமுடியும்.

சமூக சேவைகள் உத்தியோகத்தரின் ஏனைய சேவைகள் எவை?

1 கிராமமட்ட நிறுவனங்களுக்கான கூட்டங்களை கிரமமாக ஒழுங்குபடுத்தி நடாத்துதல்
2 கிராமமட்ட நிறுவனங்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்குதல்
3 அங்கத்தவருடைய அறிவுத்திறனை விருத்தி செய்வதற்கான பயிற்சிகளை வழங்குதல்
4 கிராமமட்ட நிறுவனங்களைப் பதிவு செய்வதற்கான உதவிகளை வழங்குதல்.
5 முதியோருக்கான மாதாந்த உதவிப்பணத்தை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளல்.

6 அடையாளம் காணப்பட்ட தேவைநநாடிகளுக்கு வாழ்வாதார உதவி

7 மாற்று வலுவுடையோருக்கு முச்சக்கர வண்டி வழங்குதல்

8 ஓய்வூதியம் கிடைக்கப்பெறாதவர்களின் நலனுக்கான சங்கமொன்றினை ஸ்தாபித்தல் இயக்குதல்

9 முதியோர் அடையாள அட்டை வழங்குதல்

10 ஆதரவற்ற முதியோரை முதியோர் இல்லங்களுக்கு அனுப்பவேண்டிய சிபாரிசினை மேற்கொள்ளல்

11 அனர்த்தகாலங்களின் போது ஒருங்கிணைந்து சேவையாற்றுதல்

12. எனது வீட்டிற்கு அருகாமையில் கந்தன் என்பவர் 5புகையிலைக் குடில்களை உருவாக்கி தொடர்ச்சியான புகையிலை பதனிடலை மேற்கொண்டு வருகிறார். இதிலிருந்து வெளிவரும் புகையினால் எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் சுவாச நோய்கள் வரும் ஆபத்துள்ளதை உணர்கிறேன். இதற்கு யாது செய்யலாம்?

சுற்றுச்சூழல் அதிகார சபையினர் இதற்கான தீர்வைப் பெற்றுத் தருவர்.

சுற்றுச் சூழல் அதிகார சபை
யாழ் நீதிமன்றக்கட்டடம் முன்னால்
பிரதான வீதி
யாழ்ப்பாணம்.

சுற்றுச்சூழல் அதிகார சபையினால் வழங்கப்படும் வேறு உதவிகள் எவை?

1 சுற்றாடல் அழிவுகளுக்கு எதிரான பொதுமக்களின் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளலும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளலும்.

2 வளியையும் நீரையும் மாசுபடுத்தல் மண்அரிப்பையும் கைத்தொழில் மாசுபடுத்தலையும் கட்டுப்படுத்தலுடன் தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ளல்

3 இயற்கை வளங்களின் பேணுகை முகாமை நிலைபேறான பயன்பாட்டுக்காக தொடர்புபட்ட உபாயமுறைகளை வகுத்தமைத்துச் செயற்படுத்துதல்.

4 சுற்றாடல் கல்வி சம்பந்தமான நிகழ்ச்சிதிட்டங்களை மேம்படுத்தலும் விழிப்புணர்வை ஏற்படுத்தலும்

5 வழக்குத்தொடர்தல் அல்லது வேறு செயல்கள் மூலம் முறைப்பாடுகள் தொடர்பில் செயலாற்றுவதன் பயனாக தேசிய சுற்றாடல் சட்டத்தை வலுப்படுத்தல்.

13. நான் சுபா கடந்த 10 வருடங்களாக யாழ்ப்பாணத்திலுள்ள முருகன் வர்த்தக நிலையத்தில் கடமையாற்றி வருகிறேன். மாதாந்தம் எனது சம்பளத்தில் ரூபா ஆயிரம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு செலுத்துவதற்காக கழிக்கப்படுவதாக முதலாளி கூறியிருந்தார். அண்மையில் எனக்குத் திருமணமாகிவிட்டது. தற்போது எனது ஊழியர் சேமலாப நிதியினை மீளப்பெற விண்ணப்பித்த போது அதிர்ச்சித்தகவலையே பெறமுடிந்தது. எனது சம்பளத்தில் கழிக்கப்பட்ட பணம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்படவில்லை. இந்த நிலையில் எனக்கு தீர்வு தர யாரும் உள்ளனரா?

ஆம் நிச்சயமாக!

மாவட்ட தொழில் அலுவலகத்திற்கு சென்று முறையிடுவதனூடாக தீர்வுக்கான வழிகாட்டலைப் பெறலாம்.

மாவட்ட தொழில் அலுவலகம்
வீரசிங்கம் மண்டபம்
யாழ்ப்பாணம்
தொ.பே.இல: 021 222 2375

வேறு என்ன உதவிகள் தொழில் திணைக்களத்தால் வழங்கப்படுகின்றன?

1 தனியார் துறை ஊழியர்களின் ஊழியர் சேமலாப நிதி பங்களிப்பினை ஒவ்வொரு தொழில் தருநரும் வழங்குவதை உறுதிப்படுத்துதல்

2 தனியார் துறை ஊழியர்களின் நலன்களைப் பேணுதல்

3 தொழிற்பிணக்கு சம்பந்தமான முறைப்பாடுகளுக்காக உரிய நிவாரணங்களைப் பெற்றுக் கொடுத்தல்

4 தொழிற்சட்ட ஆலோசனைகளை வழங்குதல்

5 தொழிற்சங்கம் பதிதல் தொடர்பான சேவைகள்

6 சம்பள சபைகளின்கீழ் வருகின்ற தொழிலாளர்களின் சம்பளம் மற்றும் ஏனைய நியதி நிபந்தனைகளை நடைமுறைப்படுத்துதல்

7 தொழில் வழிகாட்டல் ஆலோசனைகளை வழங்குதல்

8 தொழிற்கல்வி வழங்கு...

9 சிறுவர் உழைப்பை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

14. நான் உதயா சித்தானை கிராம மாதர் சங்கத்தலைவியாக இருக்கிறேன். எமது கிராமம் 06 சிறு குறிச்சிகளை உள்ளடக்கிய அழகான ஒரு கிராமமாகும். இங்கு சாதிப்பிரச்சினை காரணமாக அபிவிருத்திச் செயற்பாடுகள் மந்த கதியாகவே உள்ளன. மாதர்சங்க அங்கத்துவத்தின் முக்கியத்துவம் அதனூடான உதவிகள் கருத்தில் கொள்ளப்பட்டு அனைவரது அங்கத்துவம் தேவை என கூறப்படுகிறது. பொதுவான மாதர் கிராம அபிவிருத்திச்சங்கமொன்றை உருவாக்க நாம் விரும்புகிறோம். எவ்வாறு மேற்கொள்ளலாம்?

உங்கள் கிராம சேவகருடன் முதலில் தொடர்பை ஏற்படுத்துங்கள் பின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் ஆலோசனையைப் பெற்று தீர்வைப் பெறலாம். ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் உள்ளார்.

கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் ஏனைய சேவைகள் எவை?

1. கிராமத்தில் மக்களின் பிரசன்னத்துடன் உருவாக்கப் படுகின்ற கிராமமட்ட அமைப்புகளை உருவாக்குதல் பதிவு செய்தல்
2. மாதர்குழுக்களுக்கான தையல் மற்றும் அழகுக்கலை வடிவமைப்பு பயிற்சிகள் வழங்குதல்
3. கிராமமட்ட அமைப்புகளூடாக கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
4. கிராம அபிவிருத்திக்கான ஒப்பந்தங்களை பொறுப்பேற்று நடாத்துதல்.

குறிப்பு:-

குறிப்பு:-

குறிப்பு:-

குறிப்பு:-

குறிப்பு:-



**Boss**

Boasco
Nallur, Jaffna, Sri Lanka.
021 222 0370